# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
(பதிவு எண் 237/84)

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**
எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.
28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeags@gmail.com

மாநிலத் தலைவர்
**மு.சுப்பிரமணியன்**

பொதுச் செயலாளர்
**மு.அன்பரசு**

மாநில துணைத் தலைவர்கள்
**ந.குமாரவேல்**
**ஆ.செல்வம்**
**எஸ்.தமிழ்ச்செல்வி**
**சு.பார்த்திபன்**
**மொ.ஞானத்தம்பி**
**மு.சுப்பிரமணியன்**

மாநிலப் பொருளாளர்
**எம்.தங்கராஜ்**

மாநிலச் செயலாளர்கள்
**இரா.பன்னீர்செல்வம்**
**சி.ஆர்.இராஜகுமார்**
**என்.ஜனார்த்தனன்**
**தி.கலைசெல்வி**
**எம்.சௌந்தரராஜன்**
**ஏ.பெரியசாமி**


ஊடகச் செய்தி.எண்.20/2017 நாள்.-14-06-2017

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் அதன் தலைவர் திரு. **மு. சுப்பிரமணியன்** மற்றும் பொதுச் செயலாளர் திரு.**மு. அன்பரசு** ஆகியோர் கூட்டாக விடுக்கும்

**ஊடகச் செய்தி**

# பிரச்சனை மாடோ, மாமிசமோ அல்ல... மதவெறி !

''யானைக்கு எர்ரம் என்றால் குதிரைக்கு குர்ரம்'' என்றொரு வட்டார வழக்கு மொழி உள்ளது. அது போல்தான் இருக்கிறது தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத்துறை அதிகாரிகள், இனவிருத்திக்காக ராஜஸ்தானில் பசுக்களை வாங்கி தமிழகத்திற்கு கொண்டுவந்தபோது தாக்கப்பட்ட சம்பவம். ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சல்மார் நகரில் 50 பசுக்களை விலைக்கு வாங்கி அவற்றை தமிழகத்திற்கு கொண்டுவர அந்நகர காவல்துறையினரிடம் முறைப்படி தடையில்லா சான்றுகளையும் பெற்று டிரக்குகளில் பசுக்களை ஏற்றிக்கொண்டு புறப்பட்டபோது, 'பசு பாதுகாவலர்கள்' என்ற அமைப்பைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்டோர் அந்த டிரக்குகளை சூழ்ந்து கொண்டு கல்வீச்சில் ஈடுபட்டு, டிரக்குகளின் முகப்பு கண்ணாடிகளை உடைத்ததோடு மட்டுமில்லாமல் டிரக் ஓட்டுநர்களையும் நையப்புடைத்துள்ளனர். இவர்கள் யாரும் தமிழக அதிகாரிகள் கூறிய வார்த்தைகளையோ, காட்டிய ஆவணங்களையோ, கேட்கவோ, பார்க்கவோ தயாராக இல்லாததோடு ஒருகட்டத்தில் தமிழக அதிகாரிகளையும் தாக்க முற்பட்டுள்ளனர். இந்தக் கும்பல் மேலும் ஒருபடி போய் அந்த டிரக்குகளை எரிக்க முயற்சி செய்துள்ளனர். உடனடியாக போலீசாருக்கு தகவல் அளித்தும் அவர்கள் விரைந்து வந்து கலவரக் கும்பலை தடுக்கவோ, தாக்கப்பட்ட தமிழக அதிகாரிகளையும், வாகன ஓட்டுநர்களையும் மீட்கவோ நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுடன் பசு பாதுகாவலர்களின் செயல்களை கண்டிக்காமலும் கண்டு கொள்ளாமலும் அலட்சியமாக இருந்துள்ளனர். தமிழக அதிகாரிகள் காவல்துறை மேலதிகாரிகளுக்கு நிலைமையின் விபரீதத்தை உணர்த்திய பின்னரே மாடுகளுடன் கூடிய டிரக்குகள் எரிக்கப்படவிருந்த நிகழ்வு தடுக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

இந்த செய்திகளை அறிந்த பின் சில கேள்விகள் எழுவது தவிர்க்க இயலாததாகி உள்ளது. உண்மையில் இந்த 'பசு பாதுகாவலர்கள்' அமைப்பைச் சேர்ந்தவர்கள் யார்? மாடுகள் கடத்தப்படவில்லை என்றும், முறையான அனுமதியுடனும், விதிமுறைகளுடனும்தான் கொண்டு செல்லப்படுகின்றன என்றும் தமிழக அதிகாரிகள் கூறிய பின்னரும், அவர்கள் அந்த வாகனங்களையும் ஓட்டுநர்களையும் தாக்கியது ஏன்? மாடுகள் கடத்தப்படுவதாக நினைத்திருந்தால் அந்த டிரக்குகளை சிறைபிடித்து காவல்துறையினரிடம் ஒப்படைக்காமல் சட்டத்தை தங்கள் கையில் எடுத்துக்கொள்ள இவர்களுக்கு அனுமதி வழங்கியது யார்? இவர்களது நடவடிக்கைகளை காவல்துறையினர் கண்டுகொள்ளாமல் அலட்சியப் போக்குடன் நடந்து கொண்டதற்கு என்ன காரணம்? உண்மையில் பசுக்களை பாதுகாப்பவர்கள் அவை கொண்டுசெல்லப்படும் வாகனங்கள் மீது கல்வீசித் தாக்குவதையும், பசுக்களை தாங்கிய டிரக்குகளை எரிக்கவும் முயற்சிப்பார்களா? எல்லாவற்றையும் விட முக்கியமானது தமிழக அதிகாரிகள் மாடுகளை கொண்டு செல்ல உரிய ஆவணங்களையும் காவல்துறையின் தடையில்லா சான்றிதழையும் காட்டிய பின்னரும் அவர்கள் கலவரத்தில் ஈடுபட்டுள்ளதிலிருந்து பசுப் பாதுகாவலர்கள் கல்வியறிவுள்ளவர்கள்தானா? அல்லது காட்டுமிராண்டிகளா? என்ற சந்தேகங்கள் எழுகின்றன.

இந்த நிகழ்வு, மத்தியில் ஆளும் மோடி அரசு மதரீதியான முரடர்களை சட்டத்தின் போர்வையில் வளர்த்து வருகிறது என்ற உண்மையை வெளிக்காட்டியிருக்கிறது. அதன் தாக்கம்தான் மாடுகளை யார் கையில் பிடித்திருந்தாலும் தாக்க வேண்டும் என்றும், மாட்டுக்கறி உண்பவர்களை தூக்க வேண்டும் என்ற சித்தாந்தத்தை ஊக்குவிக்கத் துவங்கியிருக்கிறது. பிரச்னை மாடோ, மாமிசமோ அல்ல, மதவெறி. இது இந்தியாவின் மதச்சார்பற்ற தன்மைக்கு உலை வைக்கும் செயலாகப் போய் முடியும் என்பதை ஆள்பவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். அன்றின், அதை அவர்களுக்கு மக்கள் புரிய வைக்க வேண்டிய நேரத்தில் புரிய வைப்பார்கள்.

தமிழக அதிகாரிகள் மற்றும் டிரக் ஓட்டுனர்கள் ராஜஸ்தான் மாநிலத்தில் பசு பாதுகாவல்கள் என்ற மதவெறி கும்பலால் தாக்கப்பட்டதற்கும், அந்த தாக்குதலை தடுக்காமல் வேடிக்கை பார்த்த காவல்துறையினருக்கும், தாக்குதலுக்கு வருத்தம் தெரிவிக்காத இராஜஸ்தான் மாநில அரசுக்கும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கண்டனம் தெரிவிக்கிறது. மேலும் பசு பாதுகாவலர்கள் என்ற பெயரில் வன்முறையில் ஈடுபடும் மதவெறி அமைப்புகளை தடை செய்ய வேண்டும் என்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மத்திய அரசை வலியுறுத்துகிறது.

(மு.அன்பரசு)
பொதுச் செயலாளர்